
# 28 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!



நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**
M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)
மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.

தோற்றம்: 11-05-1937 மறைவு: 14-11-1997
**திரு. என். வி. என். சோமு**
முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்

---

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில்

## 2.5 கோடியாவது பயனாளிக்கு விரைவில் மருந்து பெட்டகம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!





சென்னை, நவ.15-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (14.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், உலக நீரிழிவு தினம் 2025 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, நீரிழிவு நோய் வகை - 1 விழிப்புணர்வு காணொளி மற்றும் கையேடு வெளியிட்டு, கர்ப்பகால நீரிழிவு நோயை தடுக்க ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்கும் மாதிரி திட்டத்தை தொடங்கி வைத்து, மாநில அளவில் தொற்றா நோய்களின் பக்க விளைவுகளை ஆண்டுதோறும் ஆரம்ப நிலையில் பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல் திட்டத்தை தொடங்கி வைத்து, தேசிய நலவாழ்வு குழுமத்துடன் இணைந்து பணியாற்றும் பங்குதாரர்களை சிறப்பித்து மற்றும் நீரிழிவு நோய் வகை 1ஐ கட்டுக்குள் வைத்திருக்கும் பயனாளிகளுக்கு சிறப்பு செய்து பேசினார்.

**உலக நீரிழிவு தினம்**

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 14 அன்று இந்தியாவைப் பொறுத்தவரை முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் விழா குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் நவம்பர் 14 என்பது உலக நீரிழிவு நோய் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்றைய நிகழ்ச்சி உலக நீரிழிவு நோய் தினமாகவும், குழந்தைகள் தின விழாவாகவும் கூடுதலாக பிறந்த குழந்தையிலிருந்து நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு டைப் 1 டயாபடிக் என்கின்ற வகையில் பாதிப்புக்குள்ளான குழந்தைகளை பாதுகாக்கின்ற பிரத்யேக திட்டங்களை தொடங்கி வைப்பதன் மூலம் குழந்தைகளை பாதுகாப்பதன் மூலம் குறிப்பாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் தினமாகவும் இன்று தமிழ்நாட்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னை, தஞ்சாவூர், கோவை, சேலம், திரு நெல்வேலி, தர்மபுரி, திருச்சி ஆகிய 7 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு குழந்தைகளுக்கான டைப்1, டைப்2 பிரத்யேக சிகிச்சை மையங்கள் தொடங்கப்பட்டு தற்போது சிறப்பாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இன்னமும் இந்த மையத்தை விரிவுப்படுத்தும் நோக்கில் திருவாரூர், நாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் இந்த திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

**மக்களைத் தேடி மருத்துவம்**

தமிழ்நாட்டில் தொற்றா நோய் பாதிப்புகளிலிருந்து காப்பதற்குரிய ஒரு திட்டமாக மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற ஒரு மகத்தான திட்டம் 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி தொடங்கப்பட்டது. தற்போது அந்த திட்டத்தின்படி, நீரிழிவு நோய் பாதிப்புகள் உள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டவர்கள் 58,53,666 பேர், நீரிழிவு நோயும் உயர் இரத்த அழுத்தமும் ஆக இரண்டிற்குமான நோய் பாதிப்புகள் உள்ளவர்கள் 54,75,278 பேர், ஆக 1 கோடியே 13 இலட்சத்து 28 ஆயிரத்து 944 பேர் நீரிழிவு நோயினாலும், உயர் இரத்த அழுத்த நோயினாலும் பாதிக்கப்பட்டு மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தின் வாயிலாக பயன் பெற்று வருகிறார்கள். இந்த திட்டத்தில் இன்னும் மூன்று நாட்களில் 2.5 கோடியாவது பயனாளிக்கு மருந்து பெட்டகம் தருகின்ற நிகழ்வு என்பது நடைபெற இருக்கிறது.

**நீரிழிவு நோய் பாதிப்பு**

12% இந்திய அளவிலான பாதிப்பு, 13% தமிழ்நாட்டில் இருக்கிறது. ஒரு சதவிகிதம் கூடுதலாகத்தான் இருக்கிறது. எனவே பாதிப்புகள் இருந்தாலும் உயிரிழப்புகள் பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளில் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. தொற்றா நோய்களுக்கான உயிரிழப்புகள் என்பது ஆண்டிற்கு 17,000 என்கின்ற அளவில் இருந்தது, தற்போது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் 3 ஆண்டுகளில் நிச்சயம் இந்த பாதிப்புகள் சரி பாதி அளவிற்கு குறைக்கப்படும். இந்திய அளவில் எடுத்துக் கொண்டால் தமிழ்நாடு வழிகாட்டும் மாநிலமாக திகழும்.

**பாதம் பாதுகாப்போம் திட்டம்**

பாதம் பாதுகாப்போம் திட்டம் தொடங்கப்பட்டதற்கு நீரிழிவு நோய் தான் முதல் காரணம். இன்னொன்று விவசாயிகள் பெரும்பகுதி தண்ணீரிலும் சேற்றிலும் கால்வைத்து வேலை செய்கிறார்கள். அதனால் அவர்களது பாதங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. நீரிழிவு நோய் இல்லாதவர்களுக்கு இந்த பாதிப்பு வந்தால் உடனடியாக ஆறிவிடும். நீரிழிவு நோய் பாதித்தவர்களுக்கு தான் அறுவை சிகிச்சை, உறுப்பு அகற்றுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும். நீரிழிவு நோய் பாதித்தவர்களை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. ஒரு கோடியே ஒன்பதாயிரம் பேர் அளவிற்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதில் 45,000 பேருக்கு நீரிழிவு நோய் பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 33,000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 3000 பேருக்கு சிறிய அளவிலான உறுப்புகள் இழப்பு என்பது ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உறுப்பு நீக்கவில்லை என்றால் உயிர் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும். அந்தவகையில் பாதம் பாதுகாப்போம் திட்டம் பெரிய அளவில் பயன்பெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் கூறினார்.

இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் பேரா. ஷேசையா, யுனிசெப் தலைவர் கே.எல்.ராவ் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

---

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் (எனது) தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் முன்னிலையில் நாளை (16.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணி அளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுபடி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழக துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா
2. SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) - குறித்து.
3. கழக வளர்ச்சிப் பணி

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

---



பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 137வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (14.11.2025) சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர் பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எம். அசன் மௌலானா. எஸ்.ஆர். ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் (பொறுப்பு) திருமதி வே. அமுதவல்லி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.